செ.வெ.எண்:-16/2020 நாள்:10.05.2020

திண்டுக்கல் மாவட்டம்

# பத்திரிக்கை செய்தி

---

தமிழ்நாட்டில் கொரோனா நோய் தொற்று தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்திரவு 17.05.2020 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டிப்பு செய்தும், நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.217, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:3.5.2020-ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு பணிகளுக்கும் 6.5.2020 முதல் செயல்பட வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் தொழில் வர்த்தக சங்கம் மற்றும் மாவட்ட வர்த்தக சங்க பிரதிநிதிகள் சார்பில் மேலும் சில தொழில் நிறுவனங்களை செயல்பட கோரிக்கை மனு அளிக்கப்பட்டதன் பேரில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 09.05.2020 தேதியன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தொழில் வர்த்தக சங்கம், மாவட்ட வர்த்தக சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு மேலும் சில கடைகள் / நிறுவனங்கள் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசின் செய்தி வெளியீடு எண் 325 நாள்: 09.05.2020 மற்றும் செய்தி வெளியீடு எண் 327 நாள்: 10.05.2020 ஆகியவற்றில் அறிவிக்கப்பட்டுள்ள முடிவுகளின் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் (நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர) கீழ்க்காணும் பணிகள் 11.05.2020 திங்கள் கிழமை முதல் குறிப்பிட்ட நேரத்தில் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் (நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர) உள்ள தேநீர் கடைகள் (Tea shops) பார்சல் சேவைக்கு மட்டும் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படுகிறது. தேநீர் கடைகளில் தனிநபர் இடைவெளியை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், தினமும் 5 முறை கிருமி நாசினி தெளித்து, கடையை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். கடையில் வாடிக்கையாளர்கள் நின்றோ, அமர்ந்தோ ஏதும் உட்கொள்ள அனுமதி இல்லை. இதை முறையாக கடைப்பிடிக்க தவறும் தேநீர் கடைகள் உடனடியாக மூடப்படும்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (Centralized AC) கடைகள் (ஜுவல்லரி, ஜவுளிக்கடை போன்றவை) செயல்பட தடை விதிக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்களான காய்கறிகள், மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படலாம். பிற தனிக்கடைகள் (Standalone and neighbourhood shops) காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படலாம்.

பெட்ரோல் பம்புகள் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படலாம். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பெட்ரோல் பம்புகள் 24 மணி நேரமும் செயல்படலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள தனியார் நிறுவனங்கள் 33 சதவீத பணியாளர்களுடன் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படலாம்.

மேலும் பிற தனிக்கடைகள் பிரிவில் திறக்க அனுமதிக்கப்பட்ட கடைகள் விபரம்:-

1.டீக்கடைகள் (பார்சல் மட்டும்)
2.பேக்கரிகள் (பார்சல் மட்டும்)
3.உணவகங்கள் (பார்சல் மட்டும்)
4.பூ ,பழம், காய்கறி மற்றும் பலசரக்கு கடைகள்
5.கட்டுமானப் பொருட்கள் விற்கும் கடைகள்
6. சிமெண்ட், ஹார்டுவேர், சானிடரிவேர் விற்கும் கடைகள்
7. மின்சாதனப் பொருட்கள் மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
8. மொபைல் போன் விற்கும் மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
9. கணினி விற்பனை மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
10.வீட்டு உபயோக இயந்திரங்கள் (Household Appliances) மற்றும் வீட்டுஉபயோக பொருட்கள் விற்கும் கடைகள்.
11. மோட்டார் வாகனங்கள் மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
12. கண் கண்ணாடி மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
13. சிறிய நகை கடைகள் (குளிர்சாதன வசதி இல்லாதது)
14. சிறிய ஜவுளி கடைகள் (குளிர்சாதன வசதி இல்லாதது)- **ஊரகப் பகுதிகளில் மட்டும்.**
15. மிக்சி, கிரைண்டர் பழுது நீக்கும் கடைகள்
16. டிவி விற்பனை மற்றும் பழுதுநீக்கும் கடைகள்
17. பெட்டிக்கடைகள்
18. பர்னிச்சர் கடைகள்
19. சாலையோர தள்ளுவண்டி கடைகள்
20. உலர் சலவையகங்கள்
21. கூரியர் மற்றும் பார்சல் சர்வீஸ்
22. லாரி புக்கிங் சர்வீஸ்
23. ஜெராக்ஸ் கடைகள்
24. இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன விற்பனை நிலையங்கள்.
25. இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பழுதுநீக்கும் கடைகள்
26. நாட்டு மருந்து விற்பனை கடைகள்
27. விவசாய இடுபொருட்கள் மற்றும் பூச்சிமருந்து விற்பனை கடைகள்
28. டைல்ஸ் கடைகள்
29.பெயிண்ட் கடைகள்
30. எலெக்ட்ரிகல் கடைகள்
31. ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் விற்பனை கடைகள்
32. நர்சரி கார்டன்கள்
33. மர கடைகள் மற்றும் பிளைவுட் (Plywood) கடைகள்
34. மரம் அறுக்கும் கடைகள் (Saw mills)

**முடிதிருத்தும் நிலையங்கள் (சலூன்கள்), ஸ்பா (Spa) மற்றும் பியூட்டி பார்லர்கள் இயங்க கூடாது.**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடைகளின் உரிமையாளர்கள், குளிர்சாதன வசதி இருந்தால் அதை இயக்காமல், கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் முகக்கவசம் அணியவும், தனி நபர் இடைவெளியினை பின்பற்றவும் அறிவுறுத்துவதோடு, கிருமி நாசினி மற்றும் சோப்பினால் கைகளை சுத்தம் செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மேற்கண்ட பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிக்காத நிறுவனங்கள் மூடி சீல் வைக்கப்படும்.

எனவே திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவா வண்ணம் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் போதுமான தனி நபர் இடைவெளி கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்து மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**